<u>**உதவி அமர்வு நீதிமன்றம் / சார்பு நீதிமன்றம், துறையூர்.**</u>
**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**உதவி அமர்வு நீதிபதி / சார்பு நீதிபதி,**
<u>**துறையூர்.**</u>

<u>**SC.No.139/2023**</u>

<u>**தேதி .. 29.10.2025**</u>
ராதிகா (அ.சா.1) க/பெ.செல்லதுரை

எதிரி ஆஜர்.

<u>**மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு அ.சா.1 குறுக்கு விசாரணை**</u>

1. நான் முதல்விசாரணையில் சொல்லிய சங்கதிகளைதான் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் 10 ஆம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். சம்பவம் நடந்த சமயத்தில் என் மாமா சரவணன், என் கணவர் செல்லதுரையும் என்னுடன் இருந்தார்கள் என்றால் சரியல்ல. உடனிருந்ததாக புகாரில் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட மயக்கம் எப்போது தெரிந்தது என்றால் உடனே தெரிந்துவிட்டது. சம்பவம் நடக்கும்போது அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வந்தார்களா என்றால் சம்பவம் முடிந்தபிறகு வந்தார்கள். அக்கம்பக்கம் வீட்டிலிருந்த அல்லிமுத்து, சதீஷ், அசோக், மயிலி, சங்கர், செந்தில், சுப்ரமணி, சரவணன் ஆகியோர்கள் சம்பவம் முடிந்தபிறகு வந்தார்கள். இவர்கள் இவ்வழக்கில் சாட்சியாக போட்டுள்ளார்களா என்றால் ஆமாம்.

2. போலிசார் என்னிடம் எத்தனை மணிக்கு வாக்குமூலம் வாங்கினார் என்றால் மதியத்திற்குமேல் மருத்துவமனையில் வந்து வாக்குமூலம் வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரிக்கும்போது என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் குறிப்பிட்டு சொல்லமுடியாது. என் கணவர் மட்டும் உறவினர்கள் மருத்துவமனைக்கு வந்திருந்தார்கள். நான் கையெழுத்து போடுவேன். அன்று முடியாததால் கைரேகை வைத்தேன். சம்பவம் நடப்பதற்கு என்ன காரணம் என முதல்விசாரணையில்

கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். புகார் வாக்குமூலம் வாங்கியபிறகு மீண்டும் என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சமப்வம் நடைபெற்றிருந்தால் சம்பவ இட சாட்சிகள் எனக்கு அனுசரணையாக சாட்சியளித்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

3. எதிரி மீதுள்ள முன்விரோதத்தால் எதிரி மீது பொய்யான குற்றச்சாட்டினை தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. காயத்தினால் எனக்கு உயிருக்கு ஆபத்து இல்லையென்றால் சரியல்ல. தற்போது நான் மருந்து சாப்பிட்டு வருகிறேன்.

/உண்மை நகல்/

(ஒம்)/-C.விஜய் கார்த்திக்,
சார்பு நீதிபதி,
துறையூர்.

**உதவி அமர்வு நீதிமன்றம் / சார்பு நீதிமன்றம், துறையூர்.**
**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**உதவி அமர்வு நீதிபதி / சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**SC.No.139/2023**

2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29ம் நாள் சாட்சியாகிய அ.சா.2 வது நபரின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.S.கிருஷ்ணன், இருக்கை எழுத்தர் நிலை-2 என்பவரால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : செல்லதுரை த/பெ : மாணிக்கம்

**எதிரி ஆஜர்.**

**சாட்சி மனுவின் மீது மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

1. நான் முதல்விசாணையில் கூறிய சங்கதிகளைதான் போலிசார் விசாரிக்கும்போது கூறினேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்தபிறகு போலிசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள். அதன்பிறகு நீதிமன்றத்தில்தான் விசாரித்தார்கள். சம்பவம் நடந்தபிறகு முதலுதவிக்காக செங்காட்டுப்பட்டி மருத்துவமனைக்கு சென்றதாக போலிசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் ஆமாம். என்னை எந்த அதிகாரி விசாரித்தார் என்றால் பரமேஸ்வரன் என்பவர் விசாரித்தார். நான் சொல்வதுபோல் பரமேஸ்வரன் என்பவர் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் காயம்பட்டவர் என் மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

(ஒம்)/-C.விஜய் கார்த்திக்,
சார்பு நீதிபதி,
துறையூர்.